**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண்.** 176/2020

2025ம் ஆண்டு ஜீலை திங்கள் 15 ம் நாள் செவ்வாய் கிழமை நீதிமன்ற தரப்பு சாட்சியாகிய CW1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச் கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | கார்மேகம் | **தாலுக்கா :** | நீடாமங்கலம் |
| **தந்தை பெயர் :** | சாமிகண்ணு | **தொழில்** | BDO |
| **ஊர் :** | நடுவூர் | **வயது** | 40 |

**15.07.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் நீதிமன்ற தரப்பு ஆவேன், எனக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை வந்ததன்பேரில் இந்த வழக்கு சம்பந்தமாக கருப்பூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் சமூகத்திற்கு எத்தனை வீடுகள் கட்டப்பட்டது என்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்பிக்க உத்தரவு பிறபித்த அடிப்படையில் நான் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **நீ.ம.சா.ஆ.1** ஆக குறியிடப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றம் மூலம் வந்த அழைப்பாணையில் கதவு எண்.2/228, 2/230, 2/242 யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் கேட்டு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் கதவு எண்.2/228 வசந்தா, க/பெ.தங்கராசு, கதவு எண்.2/230 கயல்விழி, க/பெ. பன்னீர்செல்வம் மற்றும் கதவு எண்.2/242 சாந்தா, க/பெ. ராசுக்கண்ணு ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டது. எந்த ஆண்டில் இந்த

திட்டம் ஏற்பட்டது என்றால் 2001–2002. எங்கள் அலுவலகத்தில் RTI மூலம் தங்கராஜ் மனு தாக்கல் செய்து அதற்கு எங்கள் அலுவலகத்தில் கொடுத்த தகவல் என்றால் சரிதான். இதில் யார் யாருக்கு மனை ஒதுக்கப்பட்டது என்ற விவரம் உள்ளது என்றால் சரிதான். கதவு எண்.2/228, 2/230, 2/242 யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது மற்றும் 2001–2002 திட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த தகவல் **நீ.ம.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு இடம் சம்பந்தமான பட்டா யார் யாரிடம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வழக்கு சொத்து எதிர்வாதிகளின் முன்னோர் பெயரான மா.சீனிசாம்பான் பெயரில் UDR பட்டாவில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கின் முழுவிவரம் எனக்கு தெரியாது அழைப்பாணையின் பெயரில் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.